# பெப்ரவரி– 11 –பொதுக்கால 06ம் ஞாயிறு
## தூய லூர்து அன்னை
### “இன்னலினின்றும் என்னை நீர் பாதுகாக்கின்றீர்” (திபா. 32:7)

## முதல் வாசகம் : லேவியர் 13 : 1 – 2, 44 - 46

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் உரைத்தது. ””ஒருவர் உடலில் தோல்மீது தொழுநோய் போன்று, ஏதேனும் தடிப்போ, சொறி சிரங்கோ, வெண்படலமோ தோன்ற, அது தொழுநோயென ஐயமுற்றால், அவர் குருவாகிய ஆரோனிடம் அல்லது குருக்களாகிய அவர் புதல்வரில் ஒருவரிடம் கொண்டு வரப்பட வேண்டும்.. அவர் தொழுநோயாளி. அவர் தீட்டுள்ளவர். அவர் தீட்டுள்ளவர், எனக் குரு அறிவிப்பார். ஏனெனில் நோய் அவர் தலையில் உள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் கிழிந்த உடை அணிந்து, தலை வாராமல் மேலுதட்டை மறைத்துக் கொண்டு, ”தீட்டு, தீட்டு”, என குரலெழுப்ப வேண்டும். நோயுள்ள நாளெல்லாம் அவர் தீட்டுள்ளவர். எனவே தீட்டுள்ள அவர் பாளையத்துக்கு வெளியே தனியாகக் குடியிருப்பார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீரே எனக்குப் புகலிடம்

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 10:31 – 11:1

அதற்கு நான் சொல்வது நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள். யூதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடையூறாய் இராதீர்கள். நானும் அனைத்திலும், அனைவருக்கும் உகந்தவனாய் இருக்கிறேன். நான் எனக்குப் பயன்தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன். நான் கிறிஸ்துவைப்போல் நடப்பதுபோன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள்.

## நற்செய்தி : மாற்கு 1 : 40 - 45

அக்காலத்தில் ஒரு நாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து, ”நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று முழந்தாள் படியிட்டு வேண்டினார். இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், ”நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” என்றார். உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார். பிறகு அவரிடம், ”இதை யாருக்கும் சொல்லவேண்டாம், கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி, நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்” என்று மிகக்கண்டிப்பாகக் கூறி உடனடியாக அவரை அனுப்பி விட்டார். ஆனால் அவர் புறப்பட்டுச்சென்று இந்தச் செய்தியை எங்கும் அறிவித்துப் பரப்பிவந்தார். அதனால் இயேசு எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ச் செல்லமுடியவில்லை வெளியே தனிமையான இடங்களில் தங்கிவந்தார். எனினும் மக்கள் எல்லா இடங்களிலிருந்தும் அவரிடம் வந்து கொண்டிருந்தார்கள்.

**தியானம்:** உள்ளத் தூய்மையோடு இறைவனை நாடும்போது இறைவன் நமக்கு துணை நிற்கின்றார். “இறைவா நீர் விரும்பினால் என்னைக் குணமாக்கும்” இது மிக எளிமையான வாக்கியம். ஆனால் அது ஆழமான விசுவாசத்தின் வெளிப்பாடு. இந்த விசுவாசத்தின் வெளிப்பாட்டைத்தான் இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் வெளிப்படுத்திநிற்கின்றன. தொழுநோய் இயேசுவின் காலத்தில் தீராத நோய். அதனால் பாதிக்கப்பட்டோர் சபிக்கப்பட்டவர்களாகவே கருதப்பட்டனர். அவர்கள் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். இயேசு விரும்பினால் தனது நோய் தீரும் என்பது தொழுநோயாளியின் நம்பிக்கை. இயேசு பரிவு கொள்கிறார், அவரைத் தொடுகிறார், தொழுநோய் நீங்கிவிடுகின்றது. இயேசுவின் பரிவும், இரக்கமும் இந்த அருஞ்செயலை நிகழ்த்திக் காட்டுகின்றன. இறைமகன் இயேசு உண்மையான பரிவிரக்கத்தை நமக்கு கற்றுத்தருகிறார். நற்செயல்கள் மூலமே பரிவிரக்கம் வெளிப்படுத்தப் படவேண்டும் என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். ஆறுதலுக்காக ஏங்கித் தவிப்போர் மட்டில் எமது இரக்கச் செயல்கள் எவ்வாறாக இருகின்றன? இறைமகன் யேசுவின் பேரிரக்கத்தை, அன்பின் கருணையை மனித நேயத்தை நாமும் பறைசாற்ற வேண்டாமா? இவை எல்லாவற்றிற்கும் நாமும் தூய்மை பெற வேண்டும். நாம் துய்மை பெற வேண்டுமானால் மன உறுதியோடு இறைவனைத் தேடுவோம். மன்னிப்பு அருட்சாதனத்தில் இறைவனோடு இணைவோம். நாமும் அவரது பரிவால் இயக்கப்படுவோம். எப்போது எல்லோருக்கும் நன்மை செய்து வாழ ஆசிப்போம்.